***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 133/2017 – P.W.3 (LW2)***

| | |
|---|---|
| *Name* | பார்த்திபன் |
| *Father/Husband's Name* | த/பெ. செல்வராஜன் |
| *Village* | மேலவாசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *45* |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அசா 1 செல்வராஜ் எனது தந்தையாவார், அசா 2 அன்பு எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி கல்யாணசுந்தரம் என்பவரை எனக்கு தெரியும், அவர் தற்போது இறந்து விட்டார். சுதன் என்பவரையும் தெரியும். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இட அளவை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. அது சம்பந்தமாக மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எனது அப்பாவால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. அதில் எங்களுக்கு ஆதரவாக இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த தடை உத்தரவு வழங்கப்பட்ட இடத்தில் உள்ள எங்களுக்குரிய விகிதத்தில் பூவரசு மரம் இருந்தது.

2. கடந்த 12.03.2017 ஆம் தேதி அன்று காலை 8.00 மணியளவில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் உள்ள பூவரசு மரத்தை ஜீவானந்தம் என்பவர் மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார், அப்போது எனது அப்பா சென்று ஜீவானந்தத்திடம் வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு முடிந்து யாருக்கு சொந்தமானது என்று தெரிந்தவுடன் வெட்டிக்கொள்ளலாம் என்று எதிரி ஜீவானந்தத்திடம் சொன்னபோது அப்போது எதிரி ஜீவானந்தம் எனது அப்பாவை குச்சிக்காரி மகனே,

தேவடியா மகனே என்று கொச்சையாக திட்டிக்கொண்டே கையில் வைத்திருந்த அருவாளால் எனது அப்பாவின் இடது கை விரல் முட்டியில் வெட்டினார்.

3. அப்போது எனது அப்பா வலி தாங்கமுடியாமல் சத்தம் போட்டுக்கொண்டே கீழே அமர்ந்து விட்டார். அந்த சத்தத்தை கேட்டவுன் நானும், எனது தம்பியும் சென்றபோது எதிரி ஜீவானந்தம் மரத்தை மீண்டும் வெட்டப்போனார். அதை நான் தடுத்தபோது எனது வலது கை நடு விரலில் வெட்டு விழுந்தது. எனது தம்பிக்கு இடது பக்க நெஞ்சிலும், வலது தோள்பட்டை பின்பகுதியில் வெட்டிவிட்டார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த கல்யாணசுந்தரம், ஜீவானந்தம் மகன் சுதன், ஜீவானந்தத்தின் அக்கா சகுந்தலா ஆகியோர்கள் எங்களை கையால் மாறி மாறி அடித்தார்கள்.

4. நாங்கள் வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டோம். அப்போது அந்த வழியாக சென்று கொண்டிருந்த கோவிந்தராஜ், லெட்சுமணன் ஆகியோர்கள் சண்டையை விலக்கி விட்டு சமாதானம் செய்து விட்டார்கள். அப்போது ஜீவானந்தம் தன் கையில் வைத்திருந்த அருவாளைக்காட்டி எங்களிடம் காட்டி என்னைக்காருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு ம ருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம், அங்கு எங்கள் மூவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து பின்னர் அதே ஆம்புலன்சில் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

5. ஆம்புலன்சில் சென்று கொண்டிருக்கும்போதே எனது தம்பிக்கு மூச்சு திணறல் வந்துவிட்டது. நான் மேற்படி மருத்துவமனையில் 26 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். எனது அப்பா 24 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். எனது தம்பி சுமார் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். மருத்துவரின் காயச்சான்றை எனது தம்பி தலைமறைவாகிவிட்டார் என்று சான்று வழங்கியுள்ளார்கள். அன்றைய தினம் எனது தம்பி மருத்துவமனையில் பாத்ரூம் சென்றவர் மயங்கி கீழே விழுந்து விட்டார். அதன் பின்னர் மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.

6. எனது கையில் நைலான் பிளேட் வைத்து ஆப்பரேசன் செய்யப்பட்டது. எனது தம்பிக்கு அன்புவிற்கு நுரையீரல் அருகே ரத்தம் உறைந்து விட்டதால் அவரது இடது பக்க விலாவின் துளையிடப்பட்டு டியூப்போட்டு 4 நாட்கள் கழித்துதான் உயிருக்கு உத்தரவாதம் கொடுக்கமுடியும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கனவே அட்வகேட் கிளர்க்காக இருந்தேன், கம்ப்யூட்டர் இஞ்சினியரிங்க்

படித்துள்ளேன் , எனது கையில் வெட்டுப்பட்டுள்ளதால் தற்பொழுது கையை பயன்படுத்தி எந்த வேலையும் செய்யமுடியாது . கையால் சாப்பிடக்கூட முடியாது, ஸ்பூனால்தான் சாப்பிட முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இதே நாளில் , இதே நேரத்தில், இதே இடத்தில் எதிரி ஜீவானந்தத்தை நான் மண் வெட்டிக்கழியாலும், எனது தந்தையும், எனது சகோதரரும் தாக்கிவிட்டதாகவும் கல்யாணசுந்தரத்தை தாக்கிவிட்டதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் ஒரு வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு 111/2017 நடந்து வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் போலீசார் என்னை விசாரிக்கும்போது ஜீவானந்தத்திற்கும், கல்யாணசுந்தரத்திற்கும் எப்படி காயம் பட்டது என்று கேள்வியை முன் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கையால் தாக்கியதாக் மருத்துவரிடம் சொன்னேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

2. நான் கையால் தாக்கியதாக மருத்துவரிடம் சொல்லவே இல்லை என்றும், நான் நல்ல குமாஸ்தாவாக இருந்ததால் ஞாபகம் இல்லை என தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களை இந்த வழக்கு சம்பந்தமாக முதன் முதலில் விசாரித்தது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்தான் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும்போது மணி 5 இருக்கும் . நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. எனது அப்பாவிடம்தான் கையெழுத்து வாங்கினார்கள்.

3. இந்த வழக்கு சம்பந்தமாக இடைக்கால உத்தரவு சம்பந்தமாக போலீசார் எதுவும் வாங்கி பார்க்கவில்லை. நான் மருத்துவமனையில் இருந்ததால் உத்தரவை கொடுக்கமுடியும். எனது தெருவில் 10, 15 வீடுகள் உள்ளது அவர்கள் யாரும் எனக்கு எதிரிகள் கிடையாது. கோவிந்தராஜ், லெட்சுமணன் எந்த தெரு என்றால் மேலத்தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். பூவரசு மரம் எனது வீட்டிற்கு பின்புறம் உள்ள மரம் என்றால் சரிதான். மேலவாசல் நடுத்தெரு என்பது வடக்கு தெற்காக உள்ளது. எங்கள் வீடு கிழக்கு பார்த்துள்ளது. எங்கள் வீட்டு கொல்லை மேற்கே உள்ளது. இந்த பூவரசு மரம் எனது வீட்டிற்கு மேற்கே உள்ளது. மேற்படி இடத்தில் ரத்தம் கொட்டிக்கிடந்தது என்றால் ஆமாம்.

4. சம்பவத்தன்று எங்கள் தெருவில் உள்ளவர்கள் யாரும் மறிக்க முற்பட்டார்களா என்றால் அவர் அருவாள் கையில் வைத்திருந்ததால் மறிக்க யாரும் முற்படவில்லை.

எனது அப்பாவிற்கு வலது கை பழக்கமா, இடது கை பழக்கமா என்றால் வலது கை பழக்கம். நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும்போது எனது தம்பிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது என்பதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது தம்பிக்கு இடது விலாவில் துளை போட்டார்கள் ரத்தம் எடுத்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் புகார் பெற்ற பிறகு போலீசார் எந்த தருணத்திலும் விசாரிக்கவில்லை.

5. சம்பவம் நடக்கும்போது கல்யாணசுந்தரத்திற்கு 70 வயது இருக்குமா என்றால் அப்போது எனக்கு தெரியாது. சுதன் என்பவர் அப்போது பள்ளி செல்லும் சிறுவனா என்றால் இல்லை. அவர் அப்பொழுது 10 ம்வகுப்பு முடித்துவிட்டு ஐ.டி.ஐ படித்துக்கொண்டிருந்தார். சம்பவத்தன்று எனது அப்பா முதல் வெட்டு வாங்கியவுடன் உட்கார்ந்து விட்டதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் நீதிமன்ற தடை உத்தரவும் கிடையாது என்றாலும், வேலி பொழியில் இருந்த பூவரசு மரத்தை மொசுக்கட்டை தொல்லையால் கழித்தார் என்றும் எனது அப்பா வலது கையில் அருவாளுடனும், நான் மண்வெட்டிக்கழியால் நான் எதிரி ஜீவானந்தத்தை அடித்தேன் என்றும், எனது அப்பா எதிரிகளை அருவாளால் வெட்ட முற்படும்போது நானும், எனது தம்பியும் மறைத்தேன் என்றும் அப்போது இந்த காயங்கள் ஏற்பட்டது என்றும், எனக்கும் எனது அப்பாவிற்கும் ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்ட காயம் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

6. சம்பவத்தன்று வம்பை துவக்கியது நாங்கள்தான் என்றும், எதிரிகளை தாக்கிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகளை இந்த வழக்கில் ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் குமாஸ்தாவாக இருந்ததால் காயங்களை பொறுத்தும், சம்பவத்தை பொறுத்தும் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

***Sd/--J. Tamizhmurugan,***
***Judicial Magistrate No.I,***
***Mannargudi.***